# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.**DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

FOURTHSEMESTER – APRIL 2018

**16UTL4ES01- FOLKLORE**

Date: 23-04-2018 Dept. No. Max. : 100 Marks
Time: 09:00-12:00

**பகுதி - அ (10 x 2 = 20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

1. இந்திய மருத்துவத்தில் அடங்கியுள்ள மருத்துவ முறைகள் யாவை?
2. ஆதுலர் சாலைகள் என்றால் என்ன?
3. ------------ மூலமாகக் கொண்டு ஆயுர்வேதமும், --------------- மூலமாகக்கொண்டு சித்த மருத்துவமும் வளரத்தொடங்கின.
4. உலக மக்களிடையே நிலவிவரும் நான்கு வகை உணவுமுறைகளை எழுதுக.
5. உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வான் என்று
அப்பாற் கூற்றே மருந்து - குறள் தரும் பொருள் யாது?
6. ‘செம்பஞ்சுக் குழம்பு’ - குறிப்பு வரைக.
7. கோழை, செம்பால் - திருமந்திரம் தரும் பொருள் யாது?
8. ‘தைலத்தோணியிடல்’ இதன் பொருள் யாது?
9. மூச்சின் மூன்று நிலைகளைக் குறிக்க.
10. ஆவாரம்பூ, வெங்காயம் தொடர்பாக வரும் பழமொழிகளை எழுதுக.

**பகுதி - ஆ (5 x 7 = 35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.**

11. சித்த மருத்துவத்தில் சீன மருத்துவத்தின் தாக்கம் குறித்து எழுதுக.
12. சித்த மருத்துவத்தின் சிறப்புத்தன்மைகளையும், அலோபதி மருத்துவம் வேகமாகப் பரவியதற்கானக் காரணங்களையும் தொகுக்க.
13. ஆசாரக்கோவைக் குறிப்பிடும் ஒழுக்க நெறிமுறைகளைக் குறிக்க.
14. ‘ஊனுக்கு ஊன்’ மருத்துவ முறையைக் கண்ணப்பநாயனார் புராணம் கொண்டு விளக்குக.
15. மருத்துவப் பழமொழிகளைத் தொகுக்க.
16. தேனின் வகைகளைக் கூறி அதன் மருத்துவக் குணங்களைக் குறிப்பிடுக.
17. மருத்துவக் குணமுடைய கிழங்குகள் குறித்து எழுதுக.

**பகுதி - இ (3 x 15 = 45 மதிப்பெண்கள்)**

**மூன்று பக்க அளவில் விடையளிக்க.**

18. தமிழ் மருத்துவக்கலையின் தோற்றம் வளர்ச்சி குறித்து விவரிக்க.

**( அல்லது )**

சங்ககால மக்களின் உணவு மற்றும் உறையுள் குறித்து எழுதுக.

19. தமிழ் வழிபாட்டு முறைகளில் காணப்படும் மருத்துவக் கருத்துகளைத் தொகுக்க.

**( அல்லது )**

நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் நம்பிக்கைகளின் வழி அறியவரும் மருத்துவக் கருத்துகளை விவரிக்க.

20. ‘இல்லற அமைதிக்கு எளியமுறை தியானம்’ என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வரைக.

**( அல்லது )**

‘யோகாசனமும் உடலோம்பும் முறையும்’ என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வரைக.

---